**சனாதிபதி நிதியம் - 2014**

---

சனாதிபதி நிதியத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 7 ஆம் இலக்க சனாதிபதி நிதிய அதிகாரச்சட்டத்தின் 9(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. நிதிய அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் கௌரவ நிதி அமைச்சருக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய மேற்கூறிய அதிகாரச்சட்டத்தின் 9(4) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிதிசார் செயலாற்றல் கூற்று பின்னிணைப்பு 01 ஆகவும், நிதி முதலீடு தொடர்பான கூற்று பின்னிணைப்பு 02 ஆகவும் உள்ளடக்கப்பட்டு நிதியத்தின் செயற்பாடுகளை நிர்வகித்தல் தொடர்பான அறிக்கையுடன் வெளியிடப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன சனாதிபதி நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான விபரமான அறிக்கை சனாதிபதியின் செயலாளருக்கு 2015 யூன் 18 ஆந் திகதி வழங்கப்பட்டது.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானது என முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகள் மற்றும் வெளிப்படுத்தல்களிற்கு ஆதாரமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவுசெய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களானவை சனாபதி நிதியத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு 1991 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்த ரூபா 250 மில்லியன் தொகையான கடனில் இன்னும் அறவிடப்பட வேண்டிய கடன் மீதி ரூபா 195 மில்லியனாக இருந்ததுடன் நிர்மாணப் பொறியியல் சேவை வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சு செயலாளரினால் சனாதிபதியின் செயலாளருக்கு விலாசமிடப்பட்ட 2014 ஆகஸ்ட் 22 ஆந் திகதிய 3/1/1/42 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் இக்கடன் தொகையானது 2014 செப்தெம்பர் மாதத்திலிருந்து ரூபா ஒரு மில்லியன் வீதம் மாதாந்தம் செலுத்துவதற்கு இணக்கம் செய்யப்பட்டிருந்தது. எனினும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் பொது முகாமையாளரினால் நிதியத்தின் கணக்காளருக்கு விலாசமிடப்பட்ட 2015 மார்ச் 24 ஆந் திகதிய 4/3/பீ/23 அலகு III ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை செலுத்துவதற்கு இணங்கியிருந்த கடன் பணம் ரூபா 61.9 மில்லியனாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அறவிடப்பட வேண்டிய மிகுதி ரூபா 133.1 மில்லியன் கடன் மீதியும் ரூபா 315.9 மில்லியன் செலுத்த வேண்டிய வட்டியும் தீர்த்துவைக்கும் முறைமை தொடர்பாக இரு பகுதியினருக்கும் இடையில் இணக்கப்பாடு ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதிசார் மீளாய்வு

## 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் செயற்பாடுகளிலிருந்து ரூபா 474.6 மில்லியன் மிகை ஏற்பட்டிருந்ததுடன் இதற்கு நேரொத்த வகையில் முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 531 மில்லியனாக இருந்ததனால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நிதிசார் விளைவுகளில் ரூபா 56.4 மில்லியன் பின்னடைவு காணப்படுகின்றது. முன்னயை ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் நிதியத்தின் செலவுகள் ரூபா 118.3 மில்லியனால் அதிகரித்தல் இந்த நிதிசார் விளைவுகளின் பின்னடைவிற்கு பிரதான காரணமாக இருந்தது.

## 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது மொத்த வருமானத்தில் 88 சதவீதமாகிய ரூபா 2,060.4 மில்லியன் தொகையானது அபிவிருத்தி லொத்தர் சபையிடமிருந்து கிடைத்திருந்ததுடன் அதனை முன்னைய ஆண்டில் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 2,009.3 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூபா 51.1 மில்லியன் அதிகரித்துள்ளது.

(ஆ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது நிதியத்தின் முதலீடு ரூபா 292.6 மில்லியன் அதிகரிப்பைச் சுட்டிக்காட்டியிருந்ததுடன் அதனை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 17 சதவீத அதிகரிப்பாகும். இந்த முதலீடுகளில் 70 சதவீதத்திற்கு மேற்பட்ட சதவீதம் தேசிய சேமிப்பு வங்கியில் நிலையான வைப்பாக

பேணப்பட்டிருந்தது. நிதியத்தின் வட்டி வருமானத்தில் ஆண்டின் இறுதியில் பெறவேண்டிய வட்டி வருமானம் முன்னயை ஆண்டில் காணப்பட்ட ரூபா 343.5 மில்லியன் தொகையானது ரூபா 43.3 மில்லியனால் அல்லது 12.6 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. ஆண்டின் இறுதியில் அபிவிருத்தி லொத்தர் சபையிடமிருந்து பெறவேண்டிய பணமானது முன்னைய ஆண்டில் காணப்பட்ட ரூபா 90 மில்லியனானது ரூபா 177.6 மில்லியனால் அல்லது 197 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

(இ) கல்விச் செயற்பாடு, மதச் செயற்பாடு, நலன்புரி மற்றும் மருத்துவச் செயற்பாடு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட செலவுகளில் முறையே 168 சதவீதம், 63 சதவீதம், 54 சதவீதம் மற்றும் 16 சதவீத அதிகரிப்பானது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் காணப்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது நிதியத்தினால் மருத்துவ உதவிக் கொடுப்பனவுகள், கலாச்சார நடவடிக்கைகள், மதச் செயற்பாடுகள், நலன்புரி நடவடிக்கைகள், கல்விச் செயற்பாடுகள், விளையாட்டு மற்றும் கலை நடவடிக்கைகள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு புலமைப் பரிசில்களை வழங்குதல், விசேட செயற்திட்டங்கள் என்பவற்றிற்காக ரூபா 968.09 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. அந்த மொத்தச் செலவுகளில் மருத்துவ உதவிக்காக ரூபா 810.38 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்ததுடன் அத்தொகையானது மொத்தச் செலவுகளில் 83.71 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தியது. வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு புலமைப் பரிசில்களுக்காக மொத்தச் செலவில் 11.44 சதவீதமும் நிதியத்தின் ஏனைய நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக 4.85 சதவீதமும் செலவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது 4,157 இருதய சத்திர சிகிச்சைகளுக்காக ரூபா 547.19 மில்லியனும் 565 புற்றுநோய் சிகிச்சைகளுக்காக ரூபா 72.59 மில்லியனும் 355 சிறுநீரக மாற்று சிகிச்சைகளுக்காக ரூபா 62.79 மில்லியனும், ஏனைய 815 சிகிச்சைகளுக்காக ரூபா 127.8 மில்லியனும் மருத்துவ உதவியாகச் செலவு செய்யப்பட்டிருந்தது. முன்னயை ஆண்டின் போது 5,111 நோயாளர்களுக்கு ரூபா 697.53 மில்லியன் செலவு செய்யப்பட்டதுடன் ஒப்பிடுகையில் நோயாளர்களின் எண்ணிக்கை 781 ஆல் அதிகரித்திருந்ததுடன் மருத்துவ உதவிச் செலவுகள் ரூபா 112.86 மில்லியனால் அதிகரித்திருந்தது.

(இ) க.பொ.த (உயர் தரம்) இல் கல்விகற்கும் 18,293 மாணவர்களுக்கு மீளாய்வாண்டின் போது ரூபா 108.56 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்ததுடன் 03 வெளிநாட்டு புலமைப் பரிசில்களுக்காக ரூபா 1.70 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது.

### 4.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

இலங்கை மத்திய வங்கியின் நடைமுறைக் கணக்கின் ரூபா 55.2 மில்லியன் மீதியானது கணக்கீட்டுக் காலப்பகுதியின் இறுதியில் காணப்பட்டது. மீளாய்வாண்டின் போது நிதியத்திற்கு மாதாந்தம் பணம் கிடைக்கும் சராசரிப் பெறுமதியானது ரூபா 186.7 மில்லியனாக இருந்ததுடன் மாதாந்தம் பணம் செலுத்தும் சராசரிப் பெறுமதியானது ரூபா 172.5 மில்லியனாக இருந்தது. இதற்கிணங்க மாதாந்தம் வங்கிக் கணக்கில் நிறுத்திவைக்கப்பட்டுள்ள பண மீதியின் சராசரிப் பெறுமதி ரூபா 14.2 மில்லியனாக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது ஆண்டு இறுதிப்பண மீதியானது 573 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. மிகைப்பணத்தை மாதாந்தம்

கணக்கில் நிறுத்திவைக்காது குறுங்கால வைப்புக்களின் முதலீடு செய்யப்படுமாக இருந்தால் 2014 ஆம் ஆண்டில் காணப்பட்ட நிதியத்தின் முதலீடுகளுக்கு ஆகக் குறைந்த வட்டி சதவீதத்தின் பிரகாரம் ரூபா 0.6 மில்லியனை உழைக்கக் கூடியதாக இருந்த போதிலும் முகாமைத்துவம் இது தொடர்பாக கவனம் செலுத்தியிருக்கவில்லை.

### 4.3 செயற்பாட்டுச் செயற்திறனின்மை

2014 ஆம் ஆண்டின் போது வெளிநாட்டுக் கல்வி நடவடிக்கைகளைத் தொடர்வதற்காக நிதியத்தினால் 05 சந்தர்ப்பங்களின் போது ரூபா 2.4 மில்லியன் தொகையான புலமைப் பரிசில்கள் செலுத்தப்பட்டிருந்தது. இதில் 03 சந்தர்ப்பங்களின் போது ரூபா 1.7 மில்லியன் பெறுமதியான புலமைப் பரிசில்களைச் செலுத்துவதற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட காரணம் தொடர்பான தகவல்கள் கோவைகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.4 இனங்காணப்பட்ட நட்டங்கள்

நிர்வாகக் கடனாக திறைசேரியில் முதலீடு செய்யப்பட்ட ரூபா 363.4 மில்லியன் தொகையானது 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 338.8 மில்லியன் பெறுமதியான 05 ஆண்டுகளின் போது முதிர்ச்சியடைகின்ற 10.6 சதவீத வட்டி வருமானத்தைக் கொண்டுள்ள திறைசேரி முறிகளாக 2014 சனவரி 31 ஆந் திகதி மாற்றப்பட்டிருந்தது. இப் பரிமாற்றத்தின் போது ரூபா 24.6 மில்லியன் நட்டம் ஏற்பட்டிருந்ததுடன் அந்நட்டம் மீளாய்வாண்டில் திரண்ட நிதியத்திலிருந்து பதிவழிக்கப்பட்டிருந்தது.

### 4.5 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீடு செய்யப்பட்ட வருமானம் மற்றும் செலவுகளை உள்ளபடியான வருமானம் மற்றும் செலவுகளுடன் ஒப்பீடு செய்தபோது 4 சதவீதத்திலிருந்து 149 சதவீதம் வரையிலான வீச்சுடைய முரண்கள் அவதானிக்கப்பட்டதனால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள பலவீனங்கள் அவ்வப்போது நிதியத்தின் செயலாளரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பெறவேண்டிய கடன் மீதிகள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

பின்னிணைப்பு- 01

**நிதிச் செயலாற்றல் கூற்று**

-------------------------------------------

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதியத்தின் வருமானம் மற்றும் செலவுகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யப்பட்டு கீழே தரப்படுகின்றது.

| **வருமானம்** | **2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக** | | | |
|---|---|---|---|---|
| | **2014** | | **2013** | |
| | **ரூபா.** | **ரூபா.** | **ரூபா.** | **ரூபா.** |
| பங்களிப்புக்கள் பெறுதல் | 65,255,844 | | 63,506,485 | |
| வட்டி வருமானம் | 214,931,518 | | 205,855,975 | |
| அபிவிருத்தி லொத்தர் சபையிடமிருந்து பெறுவனவு | 2,060,462,639 | | 2,009,375,000 | |
| | ------------------- | 2,340,650,001 | ------------------- | 2,278,737,460 |
| **செலவுகள்** | | | | |
| கணக்காய்வு கட்டணம் | 160,000 | | 150,000 | |
| சட்டக் கட்டணம் | - | | 3,000 | |
| எழுது கருவி | - | | 13,500 | |
| மருத்துவ உதவிக் கொடுப்பனவு | 810,385,663 | | 697,529,990 | |
| கலாச்சார நடவடிக்கைகள் | 1,225,000 | | 1,075,000 | |
| சமயச் செயற்பாடுகள் | 15,050,000 | | 9,250,000 | |
| நலன்புரி நடவடிக்கைகள் | 8,715,000 | | 5,658,250 | |
| கல்வி நடவடிக்கைகள் | 1,340,000 | | 500,000 | |
| புலமைப்பரிசில் உத்தேசத்திட்டத்தின் செலவுகள் | 110,774,000 | | 110,344,000 | |
| விசேட செயற்திட்டம் | 20,000,000 | | 23,908,280 | |
| விளையாட்டு மற்றும் கலை நடவடிக்கைகள் | 600,000 | | 3,000,000 | |
| மஹாபொல உயர்கல்வி நம்பிக்கை நிதியத்திற்கு 50% பங்களிப்பு | 897,768,399 | 1,865,858,062 | 896,255,500 | 1,747,521,020 |
| | ------------------- | ----------------- | ------------------- | --------------- |
| செலவை விஞ்சிய வருமான மிகை | | 474,631,938 | | 531,049,940 |

**பின்னிணைப்பு- 02**

**நிதியத்திற்கு சொந்தமான பணத்தை முதலீடு செய்தல் தொடர்பான கூற்று**

---------------------------------------------------------------------------------------------------

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதியத்திற்குச் சொந்தமான பணத்தை முதலீடு செய்வது தொடர்பான விபரம் பின்வரும் அட்டவணையில் தரப்படுகின்றது.

| முதலீட்டு வகை | 2014 சனவரி 01 இல் உள்ளவாறு மீதி | 2014 ஆம் ஆண்டில் முதலீடு | 2014 ஆம் ஆண்டில் மீளப் பெறல் | முதலீட்டு நட்டம் | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| தேசிய சேமிப்பு வங்கியில் நிலையான வைப்புக்கள் | 1,030,100,000 | 360,025,000 | - | - | 1,390,125,000 |
| மக்கள் வங்கியில் நிலையான வைப்புக்கள் | - | 12,080,000 | - | - | 12,080,000 |
| இலங்கை வங்கியில் நிலையான வைப்புக்கள் | 305,755,000 | 100,125,000 | 155,055,000 | - | 250,825,000 |
| அபிவிருத்தி லொத்தர் சபையில் முதலீடு | 2,200,000 | - | - | - | 2,200,000 |
| திறைசேரி நிர்வாகக் கடன் | 363,375,000 | - | 363,375,000 | - | - |
| திறைசேரி முறிகள் | - | 363,367,859 | - | 24,577,859 | 338,790,000 |
| | 1,701,430,000 | 835,597,859 | 518,430,000 | 24,577,859 | 1,994,020,000 |